# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No. 2/2022 | Date : 07.03.2025 | PW 2 |
|---|---|---|
| Name: சேகர் | த/பெ. வெங்கடாஜலம் | |

**3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். ராஜ்குமார் சொல்லிதான் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். ராஜ்குமார் எனக்கு உறவினர் அல்ல. ராஜ்குமார் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையே சுமார் 3 அல்லது 4 கி.மீ. தூரம் இருக்கும். நான் எனது முகவரியை நிரூபிக்க நீதிமன்றத்தில் ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் நான் எனது முகவரியை நிரூபிக்க நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இதற்கு முன்பாக நான் எந்த தேதியில் சாட்சியமளித்தேன் என்று தேதி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் என்னென்ன தேதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் போலிஸில் புகாரோ அல்லது வாக்குமூலமோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கும் நான் குடியிருக்கும் இடத்திற்கும் இடையே சுமார் 5 கி.மீ. தூரம் இருக்கும். சம்பவம் நடந்த இடம் அகலமான ரோடு என்றால் சரியல்ல. வளைவான பகுதி என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் ராஜ்குமார் ெஉறல்மெட் போட்டிருநதாரா இல்லையா என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. போட்டிருந்தார் அதை நான் கவனித்தேன். நான் சொல்வது போல் ராஜ்குமார் சம்பவ சமயத்தில் ெஉறல்மெட் அணிந்திருந்தால் அவருக்கு தலையில் அடிப்பட்டிருக்காது என்றும், ெ உறல்மெட் அணியாத காரணத்தினால்தான் அவருக்கு தலையில் அடிப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் எவ்வளவு தூரத்தில் இருந்து பார்த்தேன் என்றால் நான் லாரிக்கு முன்பக்கம் இரு'ந்து சுமார் 50 அடி தூரத்தில் இருந்து பார்த்தேன். நான் சம்பவத்தை பார்த்திருந்தால் நான் போலிஸில் புகார் கொடுத்து வாக்குமூலம் கொடுத்திருப்பேன் என்றும் ராஜ்குமார் எனது மைத்துனர் உறவு முறை என்பதால் அவருக்கு ஆதரவாக அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜ்குமார் வைத்திருப்பதாக நான் கூறும் டிராக்டரின் பதிவு எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ராஜ்குமார் தோட்டத்தின் சர்வே எண் மற்றும் அதன் விஸ்தீரணம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். ராஜ்குமார் அவரது வருமானத்தை கையில் வைத்திருப்பாரா அல்லது வங்கியில் வைத்திருப்பாரா என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராஜ்குமார்க்கு வரும் வருமானம் குறித்து நான் உத்தேசமாகதான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு

சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும் ராஜ்குமார் என்ன சம்பாதிக்கிறார் என்றும் எனக்கு தெரியாது என்றும் ராஜ்குமார் எனது உறவினர் என்பதால் அவர் மீதுள்ள தவறை மறைக்கும் நோக்கத்தோடு என்னை வைத்து தவறான சாட்சியம் அளிக்க சொல்லியுள்ளார் என்றும் நான் தவறான சாட்சியமளிப்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

ஒம்/–சேகர்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டுர்.